(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 35.]

பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

2025 மார்ச் 07, வெள்ளிக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

154/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னாரில் நிறுவப்பட்டுள்ள "தம்பபவனீ" காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தின் கொள்ளளவு (Installed Capacity) யாதென்பதையும்;

(iv) மேற்படி மின்னுற்பத்தி நிலையத்தில் மின்சார அலகு ஒன்றை உற்பத்தி செய்வதற்காகச் செலவிடப்படும் பணத்தொகை யாதென்பதையும்;

(v) 2021 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை மேற்படி மின்னுற்பத்தி நிலையம் மூலமாக தேசிய மின் கட்டமைப்புக்குச் சேர்க்கப்பட்டுள்ள வலு சக்தியின் அளவு ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின்னுற்பத்தி நிலையம் காரணமாக இடம்பெயரும் பறவைகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(ii) அந்த நடவடிக்கைகள் எவ்வாறு வெற்றியளித்துள்ளன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மன்னார் தீவில் மேலும் காற்றாளை மின்னுற்பத்தி நிலையங்களை நிர்மாணிப்பதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களின் கொள்ளளவு யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

253/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஹப்புத்தளை மற்றும் ஹல்தமுல்லை பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) அக்காணி அளவு ஒவ்வோர் கிராம அலுவலர் பிரிவின் பிரகாரம் ஹெக்டயார் அளவில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணிகளில் இரண்டாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iv) அவ்வொவ்வோர் இரண்டாம் தரப்பினரதும் பெயர், அத்தரப்பினருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ள இடம் மற்றும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை என்பவை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமற்ற அரச காணிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் அளவுகள் ஹெக்டயார்களில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி பிரதேச செயலகப் பிரிவுகளில் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ள விவசாயக் காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

(iii) அக்காணிகளுள் இன்றளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

292/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கையில் பெய்த கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக புத்தளம் ஆதார வைத்தியசாலையின் நோயாளர் தங்கும் விடுதிகள், வெளிநோயாளர் பிரிவுகள், சிகிச்சைப் பிரிவுகள் உள்ளிட்ட வைத்தியசாலை வளாகம் வெள்ளத்தால் மூழ்கியதென்பதையும்;

(ii) மேற்படி வைத்தியசாலையில் கழிவு நீரை வெளியேற்றவும், மழைநீர் வழிந்தோடவும் வடிகான் தொகுதி இல்லையென்பதையும்;

(iii) நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கும் வைத்தியசாலை வளாகங்கள் மிகவும் பாதுகாப்பாக பராமரிக்கப்படல் வேண்டுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி வைத்தியசாலை வளாகத்தை மிகவும் பாதுகாப்பாக பராமரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

304/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை இலங்கைத் துறைமுக அதிகாரசபை மற்றும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான ஒவ்வொரு முனையத்திற்கும் வந்தடைந்த கப்பல்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதே காலப்பகுதியில் அந்த முனையங்கள் ஒவ்வொன்றினாலும் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அதே காலப்பகுதிக்கான அத்தகைய முனையங்கள் ஒவ்வொன்றினதும் தொழிற்பாட்டு இலாபம் எவ்வளவு என்பதையும்;

(iv) அதே காலப்பகுதியில் அதிகாரசபையால் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் இலாபம் எவ்வளவு என்பதையும்;

(v) மேலே இல. (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு முனையங்களின் வினைத்திறன், அத்தகைய ஒவ்வொரு முனையங்களாலும் ஒரு மணி நேரத்திற்குக் கையாளப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கையின் மூலம் எவ்வளவு என்பதையும்;

வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரை இலங்கையில் கையாளப்பட்ட கொள்கலன்கள் மற்றும் பொதுச் சரக்குகளின் மொத்த எண்ணிக்கை (தொன்களில்) யாதென்பதையும்;

(ii) அடுத்த பத்து ஆண்டுகளில் கையாள்வதற்கு எதிர்பார்க்கப்படும் கொள்கலன்கள் மற்றும் பொதுச் சரக்குகளின் எண்ணிக்கை (தொன்களில்) யாதென்பதையும்;

(iii) கடந்த 5 ஆண்டுகளில் கொள்கலன் கையாளுதலில் இலங்கையின் உலகத் தரவரிசை யாதென்பதையும்;

வெவ்வேறாக அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

492/2025

கௌரவ தேவாநந்த சுரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்கள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தின்படி, பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்கள் கொண்டு நடத்தப்பட வேண்டுமா என்பதையும்;

(iii) பதிவுசெய்யப்பட்ட மருந்தகங்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில், பதிவுசெய்யப்பட்ட மருந்தாளர்களின் பற்றாக்குறை காணப்படுவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அந்தப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக மருத்துவ சபையில் பதிவுசெய்வதற்கு க.பொ.த (உ/த) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டியதை அறிவாரா என்பதையும்;

(ii) இறுதியாக நடாத்தப்பட்ட வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்கு தோற்றிய சுமார் 1700 விண்ணப்பதாரர்களில் 99 விண்ணப்பதாரர்கள் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர் என்பதோடு அவ்வெண்ணிக்கையானது பரீட்சைக்குத் தோற்றிய மொத்த விண்ணப்பதாரர்களில் வெறுமனே 6% இலும் குறைவான விகிதமாக உள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட பதினைந்தாவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, மார்ச் 06).

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 நவம்பர் 22 ஆம் திகதிய 2411/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75 (1) பிரிவின் கீழ் இரட்டை வரி விதிப்பினை தவிர்ப்பதற்காக மற்றும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுப்பது தொடர்பில் 2013 யூலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 2013 செப்டெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 1828/9 கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை திருத்தப்பட்டு, 2024 டிசெம்பர் 16 ஆம் திகதியன்று செய்துகொள்ளப்பட்டதும் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கூட்டிணைந்த பத்திரம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 112 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2024 டிசம்பர் 22 ஆம் திகதிய 2415/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 10 ஆம் திகதிய 2418/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2025)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 சனவரி 10 ஆம் திகதிய 2418/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் 2023.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவின் கீழ் 2024.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 23(4) ஆம் பிரிவின் கீழ் 2024.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் கீழ் 2024.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்,— இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் கீழ் 2024.05.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.18 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.08.08 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் இன் ஆண்டறிக்கை (2018),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் கீழ் 2023.08.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் இன் 2018 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.04.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் இன் ஆண்டறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் கீழ் 2024.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய மில்கோ (பிறைவட்) லிமிட்டெட் இன் 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.04.26 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*16.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் வருடாந்த அறிக்கை (2020),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் 2023.11.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*17.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கைகள் (2015, 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020),— 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணி சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, முறையே 2015.12.31, 2016.12.31, 2017.12.31, 2018.12.31, 2019.12.31 மற்றும் 2020.12.31 ஆம் திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2015, 2016, 2017, 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.11.15 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.05.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*18.

கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்,— காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை (2021),— 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணி சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் 2023.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.11.15 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.05.10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*19.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியின் வருடாந்த அறிக்கைகள் (2012, 2013, 2014, 2015, 2016, மற்றும் 2017),— 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிச் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் கீழ் 2023.11.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2012.12.31, 2013.12.31, 2014.12.31, 2015.12.31, 2016.12.31 மற்றும் 2017.12.31 ஆம் திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய எல்கடுவ பெருந்தோட்டக் கம்பெனியின் 2012, 2013, 2014, 2015, 2016, மற்றும் 2017ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*20.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2017),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2023.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*21.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2018),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2023.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2018.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*22.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2019),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2023.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*23.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1958 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் 2024.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*24.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர், — களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிரெட்டின் வருடாந்த அறிக்கை (2020/2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.08.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.03.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிரெட்டின் 2020/2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*25.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*26.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சி நிறுவனச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் 2024.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*27.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகாரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*28.

பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கை (2022),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் 2024.01.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலைச் சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பொருட்கள் மற்றும் சேவைகள் ஏற்றுமதியை அதிகரித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.14 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*29.

இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் கீழ் 2023.10.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.07.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*30.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1987 இன் 23 ஆம் இலக்க, அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாகவோ பொதுக் கம்பெனியாக மாற்றுதல் சட்டத்தின் 2(I) ஆம் பிரிவின் பிரகாரம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*31.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1987 இன் 23 ஆம் இலக்க, அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாகவோ பொதுக்கம்பெனியாக மாற்றுதல் சட்டத்தின் 2(I) ஆம் பிரிவின் பிரகாரம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*32.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2023.11.28 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.03.05 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.06.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*33.

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்,— தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் 2024.05.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(சிறுவர்கள், பெண்கள் மற்றும் பாலினம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.06.20 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*34.

புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,— காலி மரபுரிமை மன்றத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1994 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க காலி மரபுரிமை மன்றச் சட்டத்தின் III ஆம் பகுதியின் 16 ஆம் பிரிவின் கீழ் 2023.12.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய காலி மரபுரிமை மன்றத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(ஊடகம், இளைஞர், மரபுரிமை மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.07.10 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.09.03 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

"ஒதுக்கீடு" எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படுகின்ற திருத்தங்களைத் "தினப்பணிக்கான அனுபந்தம்" எனும் தனியிதழிற் பார்க்க.